
# இறைமக்கள் திருப்பலி



## The Order of Mass

Tamil Chaplaincy, U.S.A.

This book belongs to:

**Punithavath Joseph**

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா இரத்தினம்மா
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்டாரகம், கரம்பன்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

# இறைமக்கள் திருப்பலி

## மக்களோடு ஒப்புக்கொடுக்கும்
## திருப்பலியின் சடங்கு முறை


அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

## The Order of Mass

வெளியீடு

தமிழ் ஆன்மீக பணியகம்
ஐக்கிய அமெரிக்கா
U. S. A.

For Private Circulation Only



**தொடக்கச் சடங்கு**

*குரு பணியாளருடன் பலிபீடத்திற்கு செல்கையில் வருகைப்பாடல் பாடப்படும்.*

குரு: பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயராலே

**மக்கள்: ஆமென்.**

**வாழ்த்துக் கூறுதல்**

குரு: நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், பரிசுத்த ஆவியின் நட்புறவும் உங்களனைவரோடும் இருப்பதாக.

**எல்: உம்மோடும் இருப்பதாக.**

**மன்னிப்பு வழிபாடு**

குரு: சகோதரர் சகோதரிகளே, திருப்பலி ஒப்புக்கொடுக்க நாம் தகுதி பெறும் பொருட்டு நம் பாவங்களை ஏற்று மனம் வருந்துவோம்.

*சிறிது நேரம் மௌனத்திற்குப்பின் குருவும் மக்களும் சேர்ந்து:*

**எல்லாம் வல்ல இறைவனிடமும் சகோதரர் சகோதரிகளே உங்களிடமும் நான் பாவியென்று ஏற்றுக்கொள்கிறேன். ஏனெனில் என் சிந்தனையாலும், சொல்லாலும், செயலாலும், கடமையில் தவறியதாலும் பாவங்கள் பல செய்தேன்.**

*(மார்பில் பிழை தட்டிக்கொண்டு)*

**என் பாவமே, என் பாவமே, என் பெரும் பாவமே. ஆகையால் எப்போதும் கன்னியான தூய மரியாளையும், வானதூதர், புனிதர் அனைவரையும்,**

**சகோதரர் சகோதரிகளே, உங்களையும் நம் இறைவனாகிய ஆண்டவரிடம் எனக்காக வேண்டிக் கொள்ள மன்றாடுகிறேன்.**

குரு: எல்லாம் வல்ல இறைவன் நம் மீது இரக்கம் வைத்து, நம் பாவங்களை மன்னித்து நம்மை முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக.

எல்: **ஆமென்.**

---

### வேறு பாடங்கள்

2. குரு: சகோதரரே, திருப்பலி ஒப்புக்கொடுக்க நாம் தகுதி பெறும் பொருட்டு நம் பாவங்களை ஏற்றுக்கொள்வோம்.

*சிறிது நேர மௌனத்திற்குப் பின்*

குரு: உள்ளம் நொறுங்கி வருந்துவோரை குணமாக்க அனுப்பப்பெற்ற ஆண்டவரே இரக்கமாயிரும்.

எல்: **ஆண்டவரே, இரக்கமாயிரும்.**

குரு: பாவிகளைத் தேடி மீட்க வந்த கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

எல்: **கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.**

குரு: தந்தையின் வலப்பக்கம் வீற்றிருந்து, எங்களுக்காகப் பரிந்து பேசுகின்ற ஆண்டவரே இரக்கமாயிரும்.

எல்: **ஆண்டவரே, இரக்கமாயிரும்.**

குரு: எல்லாம் வல்ல இறைவன் நம் மீது இரக்கம் வைத்து, நம் பாவங்களை மன்னித்து நம்மை முடிவில்லா வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக.

எல்: **ஆமென்.**

---

*பாவமன்னிப்பு வழிபாட்டில் இடம் பெறாவிட்டால், இப்பொழுது ஆண்டவரே இரக்கமாயிரும் எனும் வேண்டுதல் சொல்லப்படும்.*

குரு: ஆண்டவரே, இரக்கமாயிரும்.

**எல்: ஆண்டவரே, இரக்கமாயிரும்.**

குரு: கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.

**எல்: கிறிஸ்துவே, இரக்கமாயிரும்.**

குரு: ஆண்டவரே, இரக்கமாயிரும்.

**எல்: ஆண்டவரே, இரக்கமாயிரும**

*இந்நாள் திருப்பலிக்கு உரியதாயின், பின்வரும் பாடல் இப்பொழுது பாடப்படும் அல்லது சொல்லப்படும்:*

**உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக. பூவுலகில் நன்மனத்தோர்க்கு அமைதியும் ஆகுக. உம்மைப் புகழ்கின்றோம், உம்மை வாழ்த்துகின்றோம், உம்மை ஆராதிக்கின்றோம், உம்மை மகிமைப்படுத்துகின்றோம். உமது மேலான மாட்சிமையின் பொருட்டு உமக்கு நன்றி கூறுகின்றோம். ஆண்டவராகிய சர்வேசுரா, வானுலக அரசரே, எல்லாம் வல்ல பிதாவாகிய சர்வேசுரா, ஏக சுதனாய்ச் செனித்த ஆண்டவரே, இயேசுகிறிஸ்துவே, ஆண்டவராகிய சர்வேசுரா, சர்வேசுரனின் செம்மறியே பிதாவின் சுதனே, உலகின் பாவங்களைப் போக்குபவரே, எங்கள்மேல் இரக்கமாயிரும். உலகின் பாவங்களைப் போக்குபவரே, எங்கள் மன்றாட்டை ஏற்றருளும். பிதாவின் வலப்பக்கம் வீற்றிருப்பவரே,**

எங்கள் மேல் இரக்கமாயிரும். ஏனெனில், இயேசுகிறிஸ்துவே, நீர் ஒருவரே பரிசுத்தர், நீர் ஒருவரே ஆண்டவர், நீர் ஒருவரே உன்னதர், பரிசுத்த ஆவியோடு, பிதாவாகிய சர்வேசுரனின் மாட்சிமையில் இருப்பவர் நீரே. ஆமென்.

---

*பாடுவதற்கு கீழுள்ள பாடத்தைப் பயன்படுத்துக:*

உன்னதங்களிலே இறைவனுக்கே மாட்சிமை உண்டாகுக.
உலகினிலே நன்மனத்தோர்க்கு அமைதியும் உண்டாகுக. புகழ்கின்றோம் யாம் உம்மையே, வாழ்த்துகின்றோம் இறைவனே. உமக்கு ஆராதனை புரிந்து, உம்மை மகிமைப்படுத்துகின்றோம் யாம். உமது மேலாம் மாட்சிமைக்காக உமக்கு நன்றி நவில்கின்றோம். ஆண்டவராம் எம் இறைவனே, இணையில்லாத விண்ணரசே. ஆற்றல் அனைத்தும் கொண்டு இலங்கும் தேவ தந்தை இறைவனே. ஏக மகனாகச் செனித்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து இறைவனே, ஆண்டவராம் எம் இறைவனே, இறைவனின் திருச் செம்மறியே, தந்தையினின்று நித்தியமாகச் செனித்த இறைவன் மகனே நீர். உலகின் பாவம் போக்குபவரே, நீர் எம் மீது இரங்குவீர். உலகின் பாவம் போக்குபவரே, எம் மன்றாட்டை ஏற்றருள்வீர். தந்தையின் வலத்தில் வீற்றிருப்பவரே, நீர் எம் மீது இரங்குவீர். ஏனெனில், இயேசு கிறிஸ்துவே, நீர் ஒருவரே தூயவர். நீர் ஒருவரே ஆண்டவர், நீர் ஒருவரே உன்னதர். பரிசுத்த ஆவியுடன் தந்தை இறைவனின் மாட்சியில் உள்ளவர் நீரே. ஆமென்.

**சபை மன்றாட்டு**

குரு: செபிப்போமாக (மன்றாடுவோமாக)

*சிறிது நேரம் குருவும் மக்களும் மௌனமாகச் செபிப்பர். பின் குரு சபைமன்றாட்டைச் சொல்வார். அதன் முடிவில் :*

**எல்: ஆமென்.**





## இறைவாக்கு வழிபாடு

*வாசகர் மேடையில் நின்று முதல் வாசகத்தை அறிக்கையிடுவார். வாசக முடிவில்:*

1st reading

வாசகர்: இது ஆண்டவரின் அருள்வாக்கு

**எல்: இறைவா உமக்கு நன்றி**

பதிலுரைப் பாடலை ஒருவர் சொல்ல, மக்கள் பல்லவியைக் கூறுவர்.
இரண்டாவது வாசகம் இருந்தால், முந்தியதைப்போல் அதுவும் அறிக்கையிடப்படும்.
அதன் பின் அல்லேலூயா அல்லது வேறுபாடல் பாடப்படும்

2nd reading

— Father

**நற்செய்தி வாசகம்**

குரு: ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

**எல்: உம்மோடும் இருப்பாராக.**

குரு: (*பெயர்*).... எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்.

**எல்: ஆண்டவரே, உமக்கு மகிமை**

*நற்செய்தியின் முடிவில்:*

குரு: இது கிறிஸ்துவின் நற்செய்தி.

**எல்: கிறிஸ்துவே, உமக்குப் புகழ்.**

Bimlinam of college
Jaffna Tamil



## விசுவாச அறிக்கை

ஒரே சர்வேசுரனை விசுவசிக்கின்றேன்.
வானமும் பூமியும் காண்பவை காணாதவை
யாவும் படைத்த எல்லாம் வல்ல பிதா அவரே.
சர்வேசுரனின் ஏக சுதனாயச் செனித்த ஒரே
ஆண்டவர் இயேசு கிறிஸ்துவையும்
விசுவசிக்கின்றேன். இவர் யுகங்களுக்கெல்லாம்
முன்பே பிதாவினின்று செனித்தார். கடவுளின்று
கடவுளாக, ஒளியினின்று ஒளியாக, மெய்யங்
கடவுளினின்று மெய்யங் கடவுளாகச் செனித்தவர்.
இவர் செனித்தவர். உண்டாக்கப்பட்டவர் அல்லர்,
பிதாவோடு ஒரே பொருளானவர். இவர் வழியாகவே
யாவும் படைக்கப்பட்டன. மானிடரான நமக்காகவும்,
நம் மீட்புக்காகவும், வானகமிருந்து இறங்கினார்.
*(தலை வணங்கி)*
பரிசுத்த ஆவியினால் கன்னிமரியிடம் உடல் எடுத்து
மனிதன் ஆனார். மேலும் நமக்காகப் போஞ்சு
பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு, சிலுவையில்
அறையுண்டு, மரித்து அடக்கம் செய்யப்பட்டார்.
வேதாகமத்தின் படியே மூன்றாம் நாள்
உயிர்த்தெழுந்தார். வானகத்திற்கு எழுந்தருளி

பிதாவின் வலப்பக்கம் வீற்றிருக்கின்றார். சீவியரையும் மரித்தவரையும் நடுத்தீர்க்க மாட்சிமையுடன் மீண்டும் வரவிருக்கின்றார். அவரது அரசுக்கு முடிவு இராது. பிதாவினின்றும் சுதனினின்றும் புறப்படும் ஆண்டவரும் உயிர் அளிப்பவருமான பரிசுத்த ஆவியையும் விசுவசிக்கின்றேன். இவர் பிதாவோடும் சுதனோடும் ஒன்றாக ஆராதனையும் மகிமையும் பெறுகின்றார். தீர்க்கதரிசிகளின் வாயிலாகப் பேசியவர் இவரே. ஏக, பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்க திருச்சபையையும் விசுவசிக்கின்றேன். பாவ மன்னிப்புக்கான ஒரே ஞானஸ்நானத்தையும் ஏற்றுக்கொள்கின்றேன். மரித்தோர் உத்தானத்தையும், வரவிருக்கும் மறு உலக வாழ்வையும் எதிர்பார்க்கின்றேன். ஆமென்.

*பாடுவதற்கு பயன்படுத்தலாம்*

வானமும் பூமியும் படைத்தவராய்
கடவுள் ஒருவர் இருக்கின்றார்
தந்தை சுதன் தூய ஆவியுமாய்
தன்னில் நிறைவுடன் வாழ்கின்றார்.

பரிசுத்த ஆவியின் வல்லமையால்
திருமகன் மரியிடம் மனுவானார்
மனிதரைப் புனிதராய் ஆக்கிடவே
புனிதராம் கடவுள் மனிதனானார்

பிலாத்துவின் ஆட்சியில் பாடுபட்டார்
கல்லறை ஒன்றில் அடக்கப்பட்டார்
மூன்றாம் நாளில் உயிர்பெற்றார்
மரணத்தின் மீது வெற்றிகண்டார்

பரலோகம் வாழும் தந்தையிடம்
அரியணை கொண்டு இருக்கின்றார்
உலகம் முடியும் காலத்தில்
நடுவராய் திரும்பவும் வந்திடுவார்.

திருச்சபை உரைப்பதை நம்புகின்றோம்
புனிதர்கள் உறவை நம்புகின்றோம்
உடலின் உயிர்ப்பை மறுவாழ்வை
விசுவாசப் பொருளாய் நம்புகிறோம்.

---

விசுவாசிகளின் மன்றாட்டு



அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

# நற்கருணை வழிபாடு

*திருப்பலிக்குத் தேவையான அப்பம், இரசம் ஆகியவற்றை அல்லது திருச்சபைக்கும் ஏழைகளுக்கும் தேவையான பொருள்களை மக்கள் கொண்டுவந்து கொடுப்பதனால், விசுவாசிகளும் திருப்பலியில் சிறப்பாகப் பங்குபெறுகிறார்கள் என்பது நன்கு வெளிப்படும்.*

**காணிக்கைகளைத் தயார் செய்தல்**

குரு: ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, உம்மைப் போற்றுகின்றோம். உமது அருட்பெருக்கிலிருந்து நாங்கள் இந்த அப்பத்தைப் பெற்றுக்கொண்டோம். நிலத்தின் விளைவும் மனித உழைப்பின் பயனுமான இந்த அப்பத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். இது எங்களுக்கு வாழ்வளிக்கும் அப்பமாக மாறும்.

**எல்: இறைவன் என்றென்றும் வாழ்த்தப்பெறுவாராக!**

குரு: ஆண்டவரே, அனைத்துலகின் இறைவா, உம்மைப்போற்றுகிறோம். ஏனெனில் உமது அருட்பெருக்கிலிருந்து நாங்கள் இந்த இரசத்தைப் பெற்றக்கொண்டோம். திராட்சைக் கொடியும், மனித உழைப்பும் தந்த இந்த இரசத்தை உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். இது எங்கள் ஆன்ம பானமாக மாறும்.

**எல்: இறைவன் என்றென்றும் வாழ்த்தப்பெறுவாராக.**

குரு: சகோதரர் சகோதரிகளே, நாம் அனைவரும் ஒப்புக்கொடுக்கும் இத்திருப்பலி எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவனுக்கு ஏற்றதாகும்படி செபியுங்கள்.

எல்: ஆண்டவர் தமது திருப்பெயரின் புகழ்ச்சிக்காகவும் மகிமைக்காகவும், நமது நன்மைக்காகவும், திருச்சபை அனைத்தின் நலனுக்காகவும் உமது கையிலிருந்து இப் பலியை ஏற்றுக்கொள்வாராக.

*குரு கைகளை விரித்து காணிக்கை மீது மன்றாட்டைச் சொல்வார். அதன் முடிவில் :*

எல்: **ஆமென்.**

## நற்கருணை மன்றாட்டு

## தொடக்கவுரை

குரு: ஆண்டவர் உங்களோடு இருப்பாராக.

எல்: **உம்மோடும் இருப்பாராக.**

குரு: இதயங்களை ஆண்டவரிடம் எழுப்புங்கள்.

எல்: **ஆண்டவரிடம் எழுப்பியுள்ளோம்.**

குரு: நம் இறைவனாகிய ஆண்டவருக்கு நன்றி கூறுவோம்.

எல்: **அது தகுதியும் நீதியுமானதே.**

*–தொடக்கவுரையின் முடிவில்–*

**பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், மூவுலகின் இறைவனாகிய ஆண்டவர். வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்துள்ளன. உன்னதங்களிலே ஓசான்னா! ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசிபெற்றவர். உன்னதங்களிலே ஓசான்னா!**

*பாடுவதற்கு கீழுள்ள பாடங்கள் பயன்படும்*

பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே
மூவுலகின் தேவனாகிய ஆண்டவர்.
வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்துள்ளன
உன்னதங்களிலே ஓசான்னா! ஆண்டவர் பெயரால்
வருபவர் ஆசிபெற்றவர். உன்னங்களிலே ஓசான்னா!
உன்னதங்களிலே ஓசான்னா!!

*அல்லது:*

**தூயவர் தூயவர் தூயவர்**
**மூவுலகிறைவனாம் ஆண்டவர்:**
**வானமும் வையமும் யாவும் நும்**
**மாட்சிமையால் நிறைந்துள்ளன.**
**உன்னதங்களிலே ஓசான்னா**
**ஆண்டவர் திருப்பெயரால்**
**வருபவர் ஆசிபெற்றவரே**
**உன்னதங்களிலே ஓசான்னா**



## நற்கருணை மன்றாட்டு 3

**வா**னகத் தந்தையே, நீர் மெய்யாகவே தூயவர்;

உம்முடைய படைப்புகளெல்லாம் உம்மைப் புகழ்வது தகுமே. ஏனெனில், உம்முடைய திருமகனாகிய எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து

வழியாக, தூய ஆவியின் ஆற்றலால்,
அனைத்தையும் உய்வித்துப் புனிதப்படுத்துகின்றீர்;
கதிரவன் தோன்றி மறையும்வரை உலகெங்கும்
உமது திருப்பெயருக்குத் தூய காணிக்கை
ஒப்புக்கொடுக்குமாறு உமக்காக மக்களை
இடையறாது ஒன்று சேர்த்துவருகின்றீர்.

ஆகவே, இறைவா, நாங்கள் உமது திருமுன்
கொண்டுவந்துள்ள இக்காணிக்கைகளை அதே
தூய ஆவியால் புனிதமாக்கியருளவேண்டுமென
உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகிறோம்.
இவ்வாறு, உம்முடைய திருமகனாகிய எங்கள்
ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உடலும்
✠ இரத்தமுமாக இவை மாறுவனவாக.
அவர் பணித்தவாறே இத்திருப்பலியை
நிறைவேற்றுகின்றோம்.
ஏனெனில், அவர் கையளிக்கப்பட்ட இரவில்,
அப்பத்தை எடுத்து, உமக்கு நன்றி செலுத்தி,
வாழ்த்துரைத்து, அதைப் பிட்டு,
தம் சீடருக்கு அளித்து அவர் கூறியதாவது:

**அனைவரும் இதை வாங்கி உண்ணுங்கள்.
ஏனெனில், இது உங்களுக்காகக் கையளிக்கப்படும்
என் உடல்.**

அவ்வண்ணமே, உணவருந்தியபின், கிண்ணத்தை எடுத்து, உமக்கு நன்றிசெலுத்தி, வாழ்த்துரைத்து, தம் சீடருக்கு அளித்து, அவர் கூறியதாவது:

அனைவரும் இதை வாங்கிப் பருகுங்கள்.
ஏனெனில், இது புதிய, நித்திய
உடன்படிக்கைக்கான என் இரத்தம். இது பாவ
மன்னிப்புக்கென்று உங்களுக்காகவும்
எல்லாருக்காகவும் சிந்தப்படும். இதை என்
நினைவாகச் செய்யுங்கள்.

இது விசுவாசத்தின் மறைபொருள்.

மக்களின் வாழ்த்தொலி:

---

1. ஆண்டவரே, நீர் வருமளவும் உமது இறப்பினை அறிக்கையிடுகின்றோம்; உமது உயிர்ப்பினையும் எடுத்துரைக்கின்றோம்.

2. ஆண்டவரே, நாங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும் போதெல்லாம் நீர் வருமளவும் உமது இறப்பினை அறிக்கையிடுகின்றோம்.

3. ஆண்டவரே, உலகின் மீட்பரே, எங்களை மீட்டருளும் உமது சிலுவையினாலும் உயிர்ப்பினாலும் எங்களை மீட்டவர் நீரே.

**4. கிறிஸ்து இறந்தார், கிறிஸ்து உயிர்த்தார், கிறிஸ்து மீண்டும் வருவார்.**

பாடலுக்கு பின்வரும் பாடம் பயன்படும்:

**வாழ்க வாழ்க இயேசு வாழ்க**
**வாழ்க வாழ்க இயேசு கிறிஸ்து வாழ்க**

---

**ஆகவே, இறைவா, உம்முடைய திருமகனின் மீட்பளிக்கும் பாடுகளையும் வியப்புக்குரிய உயிர்ப்பையும் விண்ணேற்றத்தையும் நாங்கள் நினைவுகூர்கின்றோம். அவர் மீண்டும் வருவாரென எதிர்பார்த்திருக்கும் நாங்கள் இப்புனிதமான உயிருள்ள பலியை நன்றியறிதலுடன் உமக்கு ஒப்புக்கொடுக்கின்றோம். உமது திருச்சபையின் காணிக்கையைக் கண்ணோக்கியருள உம்மை மன்றாடுகின்றோம். இப்பலியினால் நீர் உளம் கனியத் திருவுளமானீர் இதை நீர் ஏற்றுக்கொண்டு,**

**உம்முடைய மகனின் திருவுடல் திருஇரத்தத்தினால் ஊட்டம் பெறும் நாங்கள், கிறிஸ்துவின் தூய ஆவியால் நிரப்பப்பெற்று கிறிஸ்துவுக்குள் ஒரே உடலும் ஒரே மனமும் உள்ளவராக விளங்கச் செய்வீராக. இவரே எங்களை உமக்கு என்றும் காணிக்கையாக்குவாராக. இவ்வாறு, நீர் தேர்ந்துகொண்டவர்களோடு, சிறப்பாக, இறைவனின்**

அன்னையாகிய, புனிதமிக்க கன்னி மரியாள், உம்முடைய புனித அப்போஸ்தலர், மறைச்சாட்சியர், (எங்கள் பாதுகாவலராகிய *அல்லது* இன்று நாங்கள் கொண்டாடும்) புனித (பெயர்) மற்றும் புனிதர் அனைவரோடும் நாங்கள் விண்ணகத்துக்கு உரிமையாளர் ஆவோமாக. இவர்களின் வேண்டுதலால் நாங்கள் எப்பொழுதும் உமது உதவியைப் பெறுவோம் என நம்பியிருக்கின்றோம்.

இறைவா, எங்களை உம்மோடு ஒப்புரவு ஆக்கும் இப்பலி உலகிற்கெல்லாம் அமைதியும் மீட்பும் தரவேண்டுமென்று மன்றாடுகின்றோம். இவ்வுலகில் பயணம் செய்யும் உமது திருச்சபை, உம் அடியாராகிய எங்கள் திருத்தந்தை (பெயர்) எங்கள் ஆயர் (பெயர்) ஏனைய ஆயர்கள், திருப்பணியாளர்கள், துறவியர், உமக்குச் சொந்தமான மக்கள் ஆகிய அனைவரும் விசுவாசத்திலும் அன்பிலும் உறுதிபெறச் செய்வீராக. நீர் விரும்பியபடி உம் திருமுன் நிற்கின்ற இக்குடும்பத்தின் வேண்டுதலுக்குக் கனிவாய்ச் செவிசாய்த்தருளும். இரக்கமுள்ள தந்தையே, எங்கும் சிதறுண்டிருக்கும் உம்முடைய மக்களைத் தயவாய் உம்மோடு சேர்த்துக்கொள்ளும்.

இறந்துபோன எங்கள் சகோதரர் சகோதரிகளையும், உமக்கு உகந்தவராய் இவ்வுலகை விட்டுச்சென்ற அனைவரையும் உமது அரசில் தயவுடன் ஏற்றருளும். நாங்களும் அங்கு வந்து சேர்ந்து, அவர்களோடு உமது மாட்சியைக் கண்டு, என்றும் மனநிறைவு அடைவோமென எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக நம்பியிருக்கின்றோம். அவர் வழியாகவே நீர் உலகிற்கு எல்லா நன்மைகளையும் வழங்குகின்றீர்.

இவர் வழியாக, இவரோடு, இவரில் எல்லாம் வல்ல இறைவனாகிய தந்தையே, தூய ஆவியின் ஒன்றிப்பில் எல்லாப் புகழும் மாட்சியும் என்றென்றும் உமக்கு உரியதே.

எல். ஆமென்

## திருவிருந்துச் சடங்கு

குரு: மீட்பரின் கட்டளையால் கற்பிக்கப்பட்டு, தேவ படிப்பினையால் பயிற்சி பெற்ற நாம் துணிந்து சொல்வோம்.

எல்: பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே

உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுவதாக

உம்முடைய இராச்சியம் வருக,

உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது

போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக.

எங்கள் அனுதின உணவை எங்களுக்கு இன்று அளித்தருளும். எங்களுக்கு தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பது போல எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும். எங்களைச் சோதனையில் விழவிடாதேயும். தீமையிலிருந்து எங்களை இரட்சித்தருளும்.

---

(பாடுவதற்கு கீழுள்ள பாடத்தைப் பயன்படுத்தலாம்)

பரலோகத்தில் இருக்கின்ற எம் பிதாவே
உம் நாமம் அர்ச்சிக்கப்படுவதாக
உம் இராட்சியம் வந்திடுக
உம்முடைய திருச்சித்தம்
பரலோகத்தில் செய்யப்படுவது போல்
பூலோகம் தனிலேயும் செய்யப்படுவதாக

எங்கள் அனுதின உணவை
எங்களுக்கின்று அளித்தருளும்
எங்களுக்குத் தீமை செய்தவரை
நாங்கள் பொறுப்து போல்
எங்கள் பாவம் தனைப் பொறுத்து
சோதனையில் எம்மை விழவிடாது

**தீமைகளில் இருந்தெங்களை**

**இரட்சித்தருளும் ஆமென் - (2)**

---

குரு: ஆண்டவரே, தீமை அனைத்திலுமிருந்து எங்களை விடுவித்து, எங்கள் வாழ்நாளில் அமைதியை கனிவுடன் அருள உம்மை மன்றாடுகிறோம். உமது இரக்கத்தின் உதவியால் நாங்கள் பாவத்திலிருந்து எப்போதும் விடுதலை பெற்று, யாதொரு கலக்கமுமின்றி நலமாயிருப்போமாக. நாங்கள் நம்பியிருக்கும் பேரின்ப வாழ்வையும் எம் மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும் மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்திருக்கின்றோம்.

**எல்: ஏனெனில் அரசும், வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே.**

குரு: ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, "சமாதானத்தை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன், என் சமதானத்தையே உங்களுக்கு அளிக்கிறேன்" என்ற உம் அப்போஸ்த்தலர் களுக்கு மொழிந்தீரே. எங்கள் பாவங்களைப் பாராமல், உமது திருச்சபையின் விசுவாசத்தையே கண்ணோக்கி, அதற்குச் சமாதானத்தையும் ஒற்றுமையையும் தந்தருளத் திருவுளம் கொள்வீராக. என்றென்றும் வாழ்ந்து ஆட்சிசெய்கின்றவர் நீரே.

**எல்: ஆமென்**

குரு: ஆண்டவருடைய சமாதானம் உங்களோடு என்றும் இருப்பதாக.

**எல்: உம்மோடும் இருப்பதாக.**

குரு: ஒருவருக்கொருவர் சமாதானத்தை அறிவித்துக் கொள்வோம்.

**(அல்லது)**

ஒருவருக்கொருவர் உறவின் வாழ்த்தை
அறிவித்துக்கொள்வோம்

*அனைவரும் ஒருவருக்கொருவர் கைகூப்பி வணக்கம் தெரிவித்து அன்புறவை (உறவின் வாழ்த்தைத்) தெரிவிப்பர்*

| **சமாதானப் பாடல்** |
| --- |
| சமாதானம், சமாதானம், சமாதானம் |
| மனிதன் மனதில் அன்பு முதலில் மலரவேண்டுமே |
| மலர அன்பு தேவனோடு உறவு வேண்டுமே |
| உறவு கொண்ட நெஞ்சிலே உவகை பொங்குமே |
| பொங்கும் உவகை பெருக மனதில் அமைதி தங்குமே |
| எங்கும் அமைதி தங்குமே. |

*–குரு அப்பத்தை பிட்கையில்–*

**எல்:** **உலகின் பாவங்களைப் போக்கும்
இறைவனின் செம்மறியே, எங்கள் மேல்
இரக்கமாயிரும். (2)**

**உலகின் பாவங்களைப்போக்கும் இறைவனின்
செம்மறியே, எங்களுக்குச் சமாதானம்
(அமைதியை) அளித்தருளும்.**

[பாடல்: உலகின் பாவம் போக்கும் இறைவனின்
செம்மறியே, எம்மேல் இரக்கம் வையும் (2)
உலகின் பாவம் போக்கும் இறைவனின்
செம்மறியே, எமக்கு அமைதி அருளும்.]

குரு: இதோ, இறைவனின் செம்மறி, இதோ
உலகின் பாவங்களைப் போக்குகின்றவர்:
செம்மறியின் விருந்துக்கு அழைக்கப்பெற்றவர்
பேறுபெற்றோர்.

**எல்: ஆண்டவரே, நீர் என் இல்லத்தில் எழுந்தருள நான் தகுதியற்றவன்(ள்); ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும், எனது ஆன்மா குணமடையும்.**

### திருவிருந்து

குரு: கிறிஸ்துவின் சரீரம்

**நற்கருணை பெறுபவர்: ஆமென்.**

*சிறிது நேரம் அமைதியாகவோ, அல்லது பாடல் பாடியோ நன்றிப்புகழ் கூறலாம்*

### நன்றி மன்றாட்டு

குரு: செபிப்போமாக (மன்றாடுவோமாக) - *மன்றாட்டின் முடிவில்* - **எல்: ஆமென்.**

## முடிவுச் சடங்கு

குரு: ஆண்டவர் உங்களோடு இருப்பாராக

**எல்: உம்மோடும் இருப்பாராக**

குரு: எல்லாம் வல்ல இறைவன், பிதா, சுதன், ✠பரிசுத்த ஆவி உங்களை ஆசீர்வதிப்பாராக.

**எல்: ஆமென்**

குரு: சென்று வாருங்கள், திருப்பலி நிறைவேறிற்று.

(அல்லது) அன்புப் பணிபுரியச் சென்று வாருங்கள்./

அன்பளிப்பு
அமரர் திருமதி நடராசா ஆச்சிப்பிள்ளை அவர்
(ஓய்வு பெற்ற ஆசிரியர் - பண்ணாகம், சுழிபுரம்)
அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டது.

சென்று வாருங்கள், கிறிஸ்துவின் அமைதி உங்களோடு இருப்பதாக.

எல்: இறைவா, உமக்கு நன்றி.

✠

## சமாதானத்துக்காக செபம்

இறைவா! என்னை உமது சமாதானத்தின் கருவியாக்கும். எங்கே வெறுப்பு உள்ளதோ அங்கே அன்பையும் எங்கே மன்க்காயம் உள்ளதோ அங்கே மன்னிப்பையும் எங்கே சந்தேகமுள்ளதோ அங்கே விசுவாசத்தையும் எங்கே நம்பிக்கையின்மை உள்ளதோ அங்கே நம்பிக்கையையும் எங்கே இருள் உள்ளதோ அங்கே ஒளியையும் எங்கே துன்பம் உள்ளதோ அங்கே இன்பத்தையும் நான் விதைப்பேனாக!

ஓ தெய்வீக குருவே! ஆறுதல் தேடுவதைவிட ஆறுதல் அளிக்கவும், பிறரால் புரிந்து கொள்ளப்படுவதைவிட பிறரைப்புரிந்து கொள்ளவும், அன்பு செய்யப்படுவதை விட அன்பு செய்யவும் எனக்கு அருள் புரியும். ஏனெனில், கொடுப்பதால் தான் பெற்றுக் கொள்கிறோம்; மன்னிப்பதால் தான் மன்னிப்பு பெறுகிறோம்; இறப்பதால் தான் முடிவில்லா வாழ்வுக்குப் பிறக்கிறோம். ஆமென்.

*தூய பிரான்சிஸ் அசிசியார்*

## மருதமடு யாத்திரிகர்கள் திருப்பதியை விட்டுப் போகுமுன் செபமாலைத்தாயாரின் திருச்சுருபத்திற்கு முன்பாகச் சொல்லும் செபம்

பரலோக பூலோக இராக்கினியே, ஆரணியத்தின் ஓதையே, யாத்திரிகர்களின் பாதையே, என்னுடைய அன்பான தாயே! நான் இந்த கண்ணீர் கணவாயிலே சஞ்சலமடைந்து, துயர்கொண்டு, அயர்வடைந்து, ஆதரவின்றிப் பரிதவிக்கின்றேன். ஐயோ! தாயே, உலக மாய்கையானது என்னை கஷ்டப்படுத்துகிறதே! நாலு பக்கமும் தீமையும் துயரமும் வளைத்து என்னைபங்கப்படுத்துகின்றதே!

அரவின் வாய்த் தேரைபோல் நடுநடுங்குகின்றேனே! ஆலைவாய் கரும்புபோல் நெருக்கப்படுகின்றேனே! அன்னையில்லாப் பிள்ளைபோல் அந்தரிக்கின்றேனே! புலியின் வாய்க் குட்டி போல் பரிதவிக்கின்றேனே! அனலில் விழுந்த புழுப்போல் துடிக்கிறேனே!அம்பு தைத்த மான்போல் அலறுகிறேனே! அந்தர வழியில் அகப்பட்ட பாலன் போல் திகைக்கின்றேனே!

அம்மா தாயே! தஞ்சமென்றடைய இடமோ இல்லை! ஆதரவளிக்க மனிதரோ இல்லை! சஞ்சலம் அகற்ற தாதையும் இல்லை! ஆறுதலுரைக்க அன்னையும் இல்லை! என்ன செய்வேன் தாயே!

நீர் கரடி புலி வசிக்கும் இக்கானகத்தூடே எழுந்தருளியிருந்து ஆதரவற்றவர்களையும் துன்பதுரிதங்களால் பீடிக்கப்படுகிறவர்களையும், சஞ்சலமுற்றவர்களையும் உமது சந்நிதிக்கு அழைக்கின்றீர். உமது இன்பதொனியைக் கேட்டு உமதண்டை ஓடிவந்து நிற்கிற உமது அடியாரை கிருபை கண்கொண்டு பாரும். என்மேல் அன்பு கூரும். உமது திருச்சுதனைக் கோரும், என் இடரைத் தீரும், எனக்குத் தேவையானவைகளைத் தாரும்.

மாமரியே, தயாபரியே, நானுமது சலுகையால் அடைந்ததும், அடைகிறதும், அடைவதுமாகிய சகல இகபர நன்மைகளுக்காகவும் உமக்கு நன்றி சொல்லி என்னையும் எனக்கு சேர்ந்தவர்களையும் எனக்குள்ள யாவற்றையும் உமக்குப் பாதகாணிக்கையாக வைக்கிறேன்.

கடைசியாய் என்அன்புள்ள தாயாரே! நான் உமது இன்ப சந்நிதானத்தை விட்டு பிரிய இருக்கிறதினால் உமது பாதாரவிந்தத்தை முத்திசெய்து உமது ஆசீர்வாதத்தை கேட்கிறேன். அவ்வாசீர்வாதம் என்மேலும் எனக்குள்ள யாவற்றின் மேலும் இருக்கக்கடவதாக! ஆமென்.

## இறைமக்களின் மன்றாட்டு

எங்கள் அன்புத் தந்தையாம் இறைவா, நீர் எங்களுக்குத் திருமுழுக்கினால் தந்த அரச குருத்துவத்துக்கு நன்றி நவில்கிறோம். எங்கள் வாழ்க்கை உமக்கு ஒரு புகழ்ச்சிப் பலியாகவும், பரிகாரப் பலியாகவும் அமைவதாக.

எங்கள் திருத்தந்தை, எங்கள் ஆயர்கள், குருக்கள், கன்னியர் அனைவரும் தம் போதனையாலும், முன்மாதிரிகையாலும், உம் திரு மகனின் அலுவலைச் சிறப்பாக ஆற்ற வேண்டிய திறனைத்தாரும். எங்கள் சிறுவர், சிறுமியர் உமது அறிவிலும், அன்பிலும் வளர்வார்களாக. அவர்களுள் பலருக்கு உம் திருப்பணியாற்றும் அழைத்தலைத்தாரும்.

எங்கள் பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர், நன்கொடையாளர், அறிமுகமானோர் அனைவரையும் உமது அன்பிலும், அருளிலும், அமைதியிலும் காத்தருளும். துன்புறுவோர்க்கு ஆறுதலும், நோயுற்றோர்க்கு நலனும் தாரும். வழிப்போக்கரைப் பாதுகாத்தருளும். முதியோர்க்கு துணையாயிரும். கைவிடப்பட்டோர்க்கும்,

வறுமையில் வருந்துவோருக்கும் வாழ்வளித்தருளும். வேலையில்லார்க்கு வேலைவாய்ப்பும், வீடில்லார்க்கு உறைவிடமும் தந்தருளும். மனக்குழப்பமுற்றோருக்கு அமைதியை அருளும். இறந்தோர் அனைவர் மேலும் முடிவில்லா ஒளி ஒளிரச் செய்தருளும்.

நாங்கள் அனைவரும் விசுவாசம், செபம், தன்னலமற்ற தியாகம், நிறையன்பு, கடும் உழைப்பு ஆகிய வற்றிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்க அருள்புரியும்.

எங்கள் அன்னையாம் கன்னிமரியின் வேண்டுதலால் அமைதியில் வாழ்ந்து, இறையன்பிலும், பிறரன்பிலும் வளர்ந்து விண்ணகம் சேர்வோமாக. ஆமென்.

அன் [illegible] சுழிபுரம்)
அமரர் [illegible] வழங்கப்பட்டது.

